ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2180/24 - 2020 ජුනි මස 17 වැනි බදාදා - 2020.06.17
*2180/24 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: DIK/LAND/02/58.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தின், திக்வெல்ல பிரதேச செயலகப் பிரிவின், இல. 452, திக்வெல்ல வடக்கு கிராம அலுவலர் பிரிவின் தபகஸ்ஆர கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தறை சிரேஷ்ட நில அளவை அதிபர் அவர்களால் தயாரிக்கப்பட்ட முற் பிரதிப்பட இல. மாற 2832 படத்தில் காட்டப்பட்டுள்ள பின்வரும் காணித் துண்டுகளின் விபரங்கள்:

*01. துண்டு இல. 01*
காணியின் பெயர் : களுவேகஹகொரட்டுவ; விபரம் : திறந்த வெற்றுக் காணி; உரிமை கோருபவர் : எம். எம். லீலாரத்ன, தபகஸ்ஆர, வலஸ்கல, திக்வெல்ல; விஸ்தீரணம் : 0.0099 ஹெக்டயார்.

*02. **துண்டு இல. 02***
காணியின் பெயர் : அருவேகஹஹேன; விபரம் : வீட்டுத் தோட்டம், 50 - 60 வரையான வயதுடைய கலப்புப் பயிர்ச் செய்கை; உரிமை கோருபவர் : எம். எம். லீலாரத்ன, தபகஸ்ஆர, வலஸ்கல, திக்வெல்ல; விஸ்தீரணம் : 0.4349 ஹெக்டயார்.

*03. **துண்டு இல. 03***
காணியின் பெயர் : வில்லபத்தினிகஹவத்த; விபரம் : வீட்டுத் தோட்டம் கலப்புப் பயிர்ச்செய்கையைக் கொண்டது; உரிமை கோருபவர் : எம். எம். லீலாரத்ன, தபகஸ்ஆர, வலஸ்கல, திக்வெல்ல; விஸ்தீரணம் : 0.0273 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு திக்வெல்லை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில்

1A - G 32362 - 32 (2020/06)
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சுசன்த அத்தநாயக்க,
பிரதேச செயலாளர்,
திக்வெல்லை.

பிரதேச செயலகம்,
திக்வெல்லை,
2020, யுன் 08.

7 - 112

---

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : BKP/LAND/ACQUI/D2/1/1.
காணி அமைச்சின் கோவை இல. : 4-3/15/2016/VE/101.

புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், 2016 ஆம் வருடத்தில் மண் சரிவின் மூலம் அகதிகளான மக்களை மீளக்குடியேற்றுவதற்காக காணி எடுத்தல். கரந்தவத்த எனும் காணி இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டுகளை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில், புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், வேகல்ல கிராம அலுவலர் பிரிவில், வெலதுடுவ கிராமத்தில் அமைந்துள்ள, கேகாலை நில அளவை அத்தியட்சகரின் ஆ.வ.கே. 3723 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 1, 2, 3 (03) ஆம் இலக்க காணித் துண்டுகளின் விபரங்கள் :

**ஆ. வ. ப. கே 3723**

**துண்டு இல. 01, 02, 03**

காணியின் பெயர் : கரந்தவத்த; உரிமை கோருவோரின் பெயர் மற்றும் முகவரி : 01. முகாமைத்துவப் பணிப்பாளர், களனி வெளி பெருந்தோட்டக் கம்பனி, இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. 02. தவிசாளர், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை, இல. 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு 02; விஸ்தீரணம் : 10.047 ஹெக்டயார்.

**நட்டஈட்டு உரித்தின் பரிசீலனைத் திகதி :**

ஆ. வ. கே. 3723 ஆம் இலக்க வரைபடத்தில் கே. 01, 02, 03 (03) ஆம் இலக்கங்களிற்காக 2020.08.20 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

ஜே. எம். ரம்யா ஜயசுந்தர,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் அலுவலர்,
புலத்கொஹுபிட்டிய.

பிரதேச செயலகம்,
புலத்கொஹுபிட்டிய,
2020, யுன் 03.

7 - 113

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.